**செய்தி வெளியீடு எண்:94** **நாள்:06.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 5.2.2021 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், **"கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும்"** என்று அறிவித்தார்கள்.

விவசாய பெருமக்களின் துயர் துடைப்பதற்காக இந்த வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பினை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பல்வேறு விவசாய சங்கங்கள் தங்களது நன்றியினை தெரிவித்து வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இன்று (6.2.2021) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காவிரி பாசன விவசாயிகள் நல சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. காவிரி S.ரெங்கநாதன், தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் திரு.P.R.பாண்டியன், காவிரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் பொதுச்செயலாளர் டெல்டா திரு.V.சத்யநாராயணன், தமிழக விவசாயிகள் நல சங்கத்தின் தலைவர் திரு. G.சேதுராமன், தமிழக விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட தலைவர் திரு. பயரி S.கிருஷ்ணமணி, தமிழக விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட செயலாளர் திரு. செம்மங்குடி M.ராஜேந்திரன், கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவர் திரு.P.விநாயகமூர்த்தி, காவேரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் மாவட்ட தலைவர் திரு. N.H. ஹாஜா மைதீன் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து, மலர்கொத்து வழங்கி, **நிவர், புரெவி போன்ற புயல்கள் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று கொரோனாவால் ஏற்பட்டுள்ள கடுமையான நிதி நெருக்கடியிலும் விவசாயிகளுக்கு இடுபொருள் உதவித்தொகை வழங்கியதோடு, கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்கடன்களையும் தள்ளுபடி செய்து வரலாற்று சாதனையை படைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் சார்பிலும், விவசாய சங்கங்களின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்கள்.**

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**